## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No.350/2023**

திரு. பழனிசாமி (D.W –2) **03.06.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் ஆங்கிலம் எழுத படிக்க தெரியும் என்றால் தெரியும். நான் தாக்கல் செய்த முதன்மை சாட்சிய பிரமான வாக்குமூலத்தை நான் கூறி எனது வழக்கறிஞர் தயார் செய்தார் என்னுடைய முதன்மை சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள அனைத்து விபரங்களும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் வீடு கட்டி விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறேன்.

2. எனக்கு வருடத்திற்கு சுமார் 5 லட்சத்திற்கு மேல் வருமானம் வரும். தாவா சொத்து தொட்டிபாளையம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். சொத்து குறித்து எனது மகன் வாதிக்கு பிரய ஒப்பந்த பத்திரம் எழுதிக் கொடுத்து அது தொட்டிபாளையம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிரைய ஒப்பந்த பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தாவா சொத்திற்கான இரண்டு அசல் கிரைய ஆவணங்களை வாதி வழக்கில் தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

3. என்னுடைய முதன்மை சாட்சிய பிரமாண வாக்குமூலம் பக்கம் இரண்டு பத்தி 3 ல் நான் ஈரோடு பவானியில் சேர்ந்த செல்வராணி என்பவரிடம் ரூபாய் 2 லட்சம் கடன் வாங்கி உள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி இரண்டு லட்ச ரூபாய் கடன் வாங்கியதற்கான ஆவணங்கள் எதுவும் நான்

இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் போட்ட ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் நான் கூறுவது போல் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் செல்வராணியிடம் வாங்கிய இரண்டு லட்ச ரூபாய் கடனுக்காக தான் என்னுடைய மகன் பெயரில் உள்ள சொத்தை கிரைய ஒப்பந்தம் எழுதிக் கொடுத்துள்ளதாக கூறுகிறேன் என்றால் சரிதான்.

4. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ– 1 கிரைய ஒப்பந்த பத்திரத்தில் நான் வாங்கிய இரண்டு லட்ச ரூபாய் கடனுக்காக தான் இந்த பிணைய ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் உண்மையிலேயே நான் வாங்கிய இரண்டு லட்ச ரூபாய் கடனுக்காக தான் இந்த வா.சா.ஆ–1 கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் அவ்வாறு விவரம் குறிப்பிட்டு எழுதி வாங்கி இருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

5. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் செல்வராணியிடம் இரண்டு லட்ச ரூபாய் கடன் வாங்கியதாகத்தான் கூறியுள்ளேன் எனவும், எங்கு வைத்து எப்போது வாங்கினேன் என்று கூறவில்லை என்று சொன்னால் சரிதான். நான் உண்மையிலேயே நான் கூறுவது போல் கடன் வாங்கி இருந்தால் அதற்கான உரிய ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரி இல்லை.

6. இந்த வழக்கின் வாதி எப்போதுமே என்னுடைய மகனிடம் தாவா சொத்தை பொறுத்து கிரையம் பெற தயாராக இருந்தார் எனவும் அதற்காக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி இருந்தார் எனவும் அதை நாங்கள் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பு வரவில்லை. செல்வராணியிடம் பெற்ற கடனுக்காக கொடுத்த ஆவணங்களை

வாதியின் பெயரில் தயார் செய்தது குறித்து காவல்துறையில் புகார் எதுவும் கொடுத்தேனா அல்லது நீதிமன்றத்தின் மூலம் நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் இல்லை. உண்மையிலேயே செல்வராணி என்னை ஏமாற்றி இருந்தால் நான் அவர் மீது காவல் துறை மூலமாகவோ அல்லது நீதிமன்றத்தின் மூலமாகவோ நடவடிக்கை எடுத்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

7. நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் எனவும் என்னுடைய மகன் வாதியிடம் கொடுத்த அசல் கிரைய ஆவணத்தின் அடிப்படையில் கிரயம் கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. நான் செல்வராணியின் பெயரிலான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாத நிலையில் அவரிடம் பெற்ற இரண்டு லட்ச ரூபாய் கடனுக்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல .

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

UMA MAHESHWARI

Digitally signed by UMA MAHESHWARI
Date: 2026.06.03 18:37:51 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.